# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2020 சனவரி

## (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

இவ்வினாத்தாள் 4 பகுதிகளைக் கொண்டது. – பகுதிகள் **A, B, C, D** ஆகிய இப்பகுதிகள் 10 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளன.

### பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01**

வினா இல. 1 ஆனது பத்து (10) கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது. இந்த ஒவ்வொரு வினாவும் 2 புள்ளிகளைக் கொண்டிருப்பதுடன் மொத்தமாக இவ்வினா 20 புள்ளிகளைக் கொண்டுள்ளது.

இல. 1.1 தொடக்கம் 1.5 வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டது. இம்முறை அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விடையெழுதப்பட்டிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஒரு சிலரே அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது விடையளித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. ஒரு சிலர் விடைப்புத்தகத்தில் விடையின் இலக்கத்தை எழுதாது, வினாத்தாளிலேயே விடைகளைத் தெரிவுசெய்திருந்தனர்.

வினா இல. 1.6 தொடக்கம் 1.10 தொடர்பில், தரப்பட்ட ஒவ்வொரு கூற்றும் சரியானதா அல்லது தவறானதா என விடைப்புத்தகத்தில் எழுதும்படி கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றி விடையெழுதியிருந்தனர். ஒரு சிலர் சரியானது அல்லது தவறானது என எழுதுவதற்குப் பதிலாக "√" மற்றும் "x" ஆகிய அடையாளங்களை இட்டிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

### பகுதி B

இந்தப் பகுதி ஒவ்வொன்றும் 5 புள்ளிகளைக் கொண்ட 05 வினாக்களைக் கொண்டிருந்தது. இவற்றுக்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும்.

**வினா இல. 02**

இவ்வினா தொடர்பாடலுடன் சம்பந்தப்பட்டது. தொடர்பாடலின் நோக்கமானது அதனைப் பெற்றுக்கொள்ளும் உண்மையான பெறுநருக்கு பயனுறுதிவாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதுடன் அனுப்புநர் எதிர்பார்த்த வகையில் பெறுநர் அதனை விளங்கிக்கொண்டிருத்தலும் வேண்டும்.

இவ்வினாவின் பகுதி **(a)** ஆனது நிறுவனமொன்றில் பயனுறுதிமிக்க தொடர்பாடலின் மூன்று அனுகூலங்களைக் கூறுவதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இது இலகுவாகப் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வினாவாக இருந்தது. இங்கு ஏதாவது மூன்று பொருத்தமான காரணங்களை பரீட்சார்த்திகள் எழுதியிருப்பின் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளை அவர்கள் பெற்றிருக்க முடியும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும்

பெற்றிருந்தனராயினும் சில பரீட்சார்த்திகள் 1 அல்லது 2 அனுகூலங்களையே எழுதியிருந்ததால் அவர்களால் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற முடியவில்லை.

இவ்வினாவின் **பகுதி (b)** இல், பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்கான இரண்டு தடைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் தடைகளைக் குறிப்பிட்டிருந்தனராயினும் அவற்றை விபரித்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 03

இவ்வினா முறைமைக் கோட்பாட்டின்படி, முறைமையொன்றின் மூன்று பாகங்களை விபரிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவை விளங்கியிருந்ததுடன் திருப்திகரமான விடைகளையும் அளித்திருந்தனர். எவ்வாறாயினும், மிகச் சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்பதையும் அவர்கள் பரீட்சைக்குத் தயாராகி இருக்கவில்லை என்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வினாவுக்கு விடையளிக்க எத்தனித்திராத பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

இவ்வினா ஊழியர்களால் மாற்றத்திற்காக ஏற்படுத்தப்படுகின்ற தடைகளுக்குரிய காரணங்கள் மூன்றை விபரிக்குமாறு தேவைப்படுத்தியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான முறையில் விபரித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் மாற்றத்திற்கான தடைக்குரிய காரணங்களை தனித்தனியாகக் குறிப்பிடாது அனைத்தையும் ஒரே பந்தியாக விபரித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இது அந்தப் பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. எவ்வாறாயினும், பெரும்பாலானவர்களால் உயர் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

இவ்வினா கலாசார வலையின் ஐந்து கூறுகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். முழுப் புள்ளிகளைப் பெற்றிருந்த ஒரு சில பரீட்சார்த்திகளும் இருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் முறையாகக் கற்றிராமையும் வினாவை விளங்கிக்கொண்டிராமையும் அவதானிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் வரலாறு, பொருள், சந்தை, தொழினுட்பவியல் மற்றும் தந்திரோபாயங்கள் போன்ற சொற்களை வினாவிலிருந்து பிரித்தெடுத்து அவற்றை விடையாக எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் கலாசார வலையின் கூறுகளாக கலாசாரத்தை விபரிக்கின்ற வரலாறு, நம்பிக்கைகள், நடத்தை போன்றவற்றை எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

இவ்வினா கலாசாரத்திற்கும் தந்திரோபாயத்திற்குமிடையிலான தொடர்பினை விபரிக்குமாறு தேவைப்படுத்தியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வினாவுக்கு மோசமாக விடையளிக்கப்பட்டமையிலிருந்து பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்பது தெரிகிறது. சில பரீட்சார்த்திகள் கலாசாரத்தையும் தந்திரோபாயத்தையும் வெவ்வேறாகக் பொருள் வரையறை செய்திருந்தனர் ஆயினும் அவற்றின் தொடர்பினை விளக்கியிருக்கவில்லை. எனவே, அத்தகைய பரீட்சார்த்திகளால் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வது கடினமாக இருந்தது. எவ்வாறாயினும் சில பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்துமிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி C

இப்பகுதியில் ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மொத்தமாக 30 புள்ளிகளுக்கு 03 கட்டாய வினாக்கள் காணப்பட்டன. மொத்தத்தில் இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

**வினா இல. 07**

இது நிறுவனக் கட்டமைப்புடன் தொடர்புடையதாக அமைக்கப்பட்டிருந்த வினாவாகும். **பகுதி (a)** ஆனது ஒழுங்கமைப்புச் செயன்முறையின் படிமுறைகளை விபரிக்குமாறு தேவைப்படுத்தியிருந்த அதேவேளை **பகுதி (b)** ஆனது ஒரு சிறந்த நிறுவனக் கட்டமைப்பின் இரண்டு நன்மைகளை விபரிக்குமாறு தேவைப்படுத்தியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கியிருந்ததுடன் சரியாக விடையளித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் நிறுவனத்தைப் பொருள் வரையறை செய்திருந்ததுடன் சம்பந்தமற்ற விடைகளை நீண்ட விளக்கத்துடன் எழுதியிருந்தனர். **பகுதி (b)** இற்கு சில பரீட்சார்த்திகள் ஒரு சிறந்த நிறுவனக் கட்டமைப்பின் நன்மைகளை குறிப்பிடாது ஒழுங்கமைப்புச் செயன்முறையை விபரித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 08**

இவ்வினா 2 பகுதிகளைக் கொண்டது. **பகுதி (a)** ஆனது மஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டை விபரிக்குமாறு கேட்டிருந்ததுடன் **பகுதி (b)** ஆனது ஊழியர்கள் ஊக்கப்படுத்தப் பட்டிருப்பதை அறிந்துகொள்ளக்கூடிய இரண்டு அறிகுறிகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

இங்கு 5 தேவைகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விபரிப்பதன் மூலம் அல்லது வரிப்படத்தை வரைவதன் மூலம் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடிய நிலை காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகளால் உளவியல் தேவையானது மஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டின் ஒரு தேவையாகக் இனங்காணப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அந்தத் தேவைகள் வெவ்வேறாகக் வழங்கப்பட வேண்டியதில்லை. உளவியல் தேவையானது பாதுகாப்புத் தேவையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் தேவைப் படிநிலைக் கோட்பாட்டை திருப்திப்படுத்துகின்ற ஒழுங்கினை இனங்காணாமை அவதானிக்கப்பட்டது.

**பகுதி (b)** இற்கு, வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே பூரணமானதும் சரியானதுமான விடையினை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள், ஊழியர்கள் ஊக்கப்படுத்தப் பட்டிருப்பதைக் குறிக்கின்ற பிரதான அறிகுறிகளின்கீழ் உப விடயங்களைக் குறிப்பிட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் ஊழியர்களின் ஊக்கப்படுத்தலின் பண்பியல்புகளை எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 09

இவ்வினா தலைமைத்துவம் பற்றியதாகும். **பகுதி (a)** ஆனது நிறுவனமொன்றிற்கு தலைமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான 3 காரணங்களை ஆராயுமாறு கேட்டிருந்தது. **பகுதி (b)** ஆனது தலைவர் ஒருவருக்கு இருக்கக்கூடிய 2 வலு மூலங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்குத் திருப்திகரமாக விடையளித்து நன்றாக விளக்கமளித்திருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் தலைவருக்கும் முகாமையாளருக்குமிடையிலான வேறுபாடுகளை எழுதியிருந்தனர். எவ்வாறாயினும், 99 % ஆன பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் தலைமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றிய தமது பொது அறிவைப் பயன்படுத்தி விடையளித்திருந்தனர். வினாவின் இப்பகுதிக்கு நடைமுறை அறிவைப் பயன்படுத்தி விடையளிக்கக்கூடியதாக இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தலைவர் ஒருவருக்கு இருக்கக்கூடிய வலு மூலங்கள் பற்றி வினவப்பட்ட **பகுதி (b)** இற்கு திருப்திகரமான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடைகளாக நிர்ப்பந்திக்கும் வலு (coercive power) மற்றும் தூண்டல் வலு (reared power) ஆகியவற்றைக் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடையளிக்கத் தவறியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி D

### வினா இல. 10

இது ஒரு விடய ஆய்வு வினாவாகும். தரப்பட்ட விவரணத்திற்கு கோட்பாட்டு ரீதியான விடயங்களை எவ்வாறு பிரயோகிக்கின்றனர் என்பது பற்றிப் பரீட்சிப்பதற்காக இவ்வினா அமைக்கப்பட்டிருந்தது. இவ்வினா **(a), (b), (c), (d)** மற்றும் **(e)** என 5 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

#### பகுதி (a)

SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி **சுப்பிரி (பிரை) லிமிட்டெட்டின்** செயற்பாடுகளுக்கு சுற்றுச்சூழல் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை ஆராயுமாறு இப்பகுதி தேவைப்படுத்தியிருந்தது. இப்பகுதியானது பரீட்சார்த்திகள் இலகுவான விளங்கிக்கொள்ளும் விதத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இங்கு பலம், பலவீனம், வாய்ப்பு மற்றும் அச்சுறுத்தல் ஆகியன தேவைப்படுத்தப்பட்டதுடன் அவ்வொவ்வொரு விடயத்திற்கும் 2 காரணங்கள் வீதம் குறிப்பிட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை அளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள், தரப்பட்ட விவரணத்திற்கு தொடர்பில்லாத வகையிலான காரணங்களை எழுதியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**பகுதி (b)**

இப்பகுதியானது **சுப்பிரி (பிரை) லிமிட்டெட்** இற்கு பயனுறுதிமிக்க தீர்மானமெடுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான 3 காரணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. விடயங்களை விபரித்திராத பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்திருந்தனராயினும் சில பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் காணப்பட்டதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**பகுதி (c)**

இப்பகுதி, குழுத் தீர்மானமெடுத்தலின் 2 அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. தரப்பட்ட விவரணத்திலிருந்து காரணங்களைப் பிரித்தெடுக்கக்கூடிய நிலைமை இங்கு காணப்பட்டது. விவரிப்பு எதிர்பார்க்கப்படவில்லை. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளால் விவரமான விடைகள் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன.

**பகுதி (d)**

தரப்பட்ட நிறுவனம் ஒரு சிறந்த கட்டுப்பாட்டுச் செயன்முறையைக் கொண்டிருப்பதால் ஏற்படும் 3 நன்மைகளை விவரிக்குமாறு இப்பகுதியில் கேட்கப்பட்டது. தரப்பட்ட விவரணத்தின் சூழலைப் பகுப்பாய்வு செய்து நன்மைகளை இனங்காணக்கூடிய நிலைமை இங்கு காணப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர்.

**பகுதி (e)**

சம்பந்தப்பட்ட நிறுவனம் எவ்வாறு ஒரு ஒழுக்கநெறிமிக்க சூழலை உருவாக்கலாம் என்பதற்கான 3 வழிவகைகளை குறிப்பிடுமாறு இப்பகுதியில் கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், தரப்பட்ட விவரணத்திற்கு கோட்பாட்டு ரீதியான அறிவைப் பிரயோகித்து திருப்திகரமாக விடை அளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

- - -

**பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்:**

1. பாடத்திட்டத்தை நன்றாகக் கற்கவும்.

2. வினாத்தாளைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும் (இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட மேலதிக நேரத்தைப் பயன்படுத்தவும்).

3. பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாக வாசித்து அதில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது தேவையற்ற விவரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்க்கவும்.

4. பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

5. விடைப்புத்தகத்தைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்களும் உங்களுடைய சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டிருக்கிறதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

6. ‘‘செயல் வினைச்சொல் நிரல்’’ வினாத்தாளின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணங்களின் அடிப்படையில் விடையளித்தல் வேண்டும்.

7. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

8. சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசிப்பது பயனுடையதாகும்.

9. உங்களது அறிவை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையெழுதிப் பயிற்சி பெறுவது சிறந்தது.

10. பரீட்சையில் சித்தியடையும் உறுதியான நோக்கத்துடனும் நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -